**மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயம், பழனி.**

**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**

**முன்னிலை : திருமதி. கா. பாரதி, M.L.,**

**கூடுதல் சார்பு நீதிபதி, பழனி.**

**2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் நாள் புதன்கிழமை**

**(திருவள்ளுவராண்டு 2056 ஸ்ரீவிசுவாவசு வருடம் பங்குனி மாதம் 04 ஆம் நாள்)**

**மோ.வா.வி.கோ.மனு எண்.172/2022**

**[TNDG07 – 000833 - 2022]**

**மற்றும்**

**மோ.வா.வி.கோ.மனு எண்.174/2022**

**[TNDG07 – 000711 - 2022]**

**மோ.வா.வி.கோ.மனு எண்.172/2022:–**

**M. முனியாண்டி --- மனுதாரர்**

**எதிர்**

**1. S. முருகசாமி**

**2. MAGMA HDI ஜெனரல் இன்சூரன்ஸ்**

**கம்பெனி லிமிடெட், சென்னை. --- எதிர்மனுதாரர்கள்**

**மோ.வா.வி.கோ.மனு எண்.174/2022:–**

**M. முனிராஜா --- மனுதாரர்**

**எதிர்**

**1. S. முருகசாமி**

**2. MAGMA HDI ஜெனரல் இன்சூரன்ஸ்**

**கம்பெனி லிமிடெட், சென்னை. --- எதிர்மனுதாரர்கள்**

மோ.வா.வி.கோ.மனு எண்.172/2022 மற்றும் மோ.வா.வி.கோ.மனு எண்.174/2022 மனுக்கள் 21.09.2022 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 02.02.2026 ஆம் தேதியன்று என் முன்னர் இறுதி விசாரணைக்காக வந்தபோது, மோ.வா.வி.கோ.மனு எண்.172/2022 மனுவில் மனுதாரர் தரப்பில் கற்றறிந்த

வழக்கறிஞர் திருவாளர் N. துரை அவர்கள் முன்னிலையாகியும், 1–ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் R. பாண்டியராஜ் அவர்கள் முன்னிலையாகியும், பின்னர் எதிர்உரை தாக்கல் செய்யாததாலும், நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததாலும் தோன்றாத்தரப்பினராக இருந்தும், 2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் A.M. அப்துல்கரீம் அவர்கள் முன்னிலையாகியும், மோ.வா.வி.கோ.மனு எண்.174/2022 மனுவில் மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் N. துரை அவர்கள் முன்னிலையாகியும், 1–ம் எதிர்மனுதாரர் தரப்பில் அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாத்தரப்பினராக இருந்தும், 2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் A.M. அப்துல்கரீம் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்டும், மனு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

<u>பொது உத்தரவு</u>

<u>மோ.வா.வி.கோ.மனு எண்.172/2022:–</u>

மனுதாரர் கோரியுள்ள இழப்பீட்டுத் தொகை ரூ.50,00,000/–மும், மேற்படி தொகைக்கு விபத்து தேதி முதல் 12 சதவீதம் வட்டியும் மற்றும் செலவுத் தொகையும் மனுதாரருக்கு, எதிர்மனுதாரர்களால் கிடைக்கும்படி உத்தரவிடக்கோரி இம்மனுவை மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு 166 தமிழ்நாடு இயக்கூர்தி கோருரிமை விதிகள் 1989 விதி (3)–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2. மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம் பின்வருமாறு : –</u>

மனுதாரர் கடந்த 13.07.2022 அன்று மதியம் சுமார் 12.00 மணியளவில் அவரது சொந்த வேலைக்காக அவருக்குச் சொந்தமான TN 57 BY 2102 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தை அவரது மகன் முனிராஜா என்பவர் ஓட்ட மனுதாரர் பின்புறம் அமர்ந்துகொண்டு பயணம் செய்து பழனி டு பழைய தாராபுரம் மெயின்ரோட்டில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ரோட்டின் இடதுபுற ஓரமாக மெதுவாகவும், கவனமாகவும் இருவரும் தலைக்கவசம் அணிந்துகொண்டும் அமர்ந்து சென்று பெரியப்பா நகர் எம்.ஜி.ஆர் சிலை அருகில் அவரது வீட்டிற்கு செல்ல வலதுபுறம் திரும்புவதற்காக ரோட்டின் இடதுபுற ஓரமாக முறையாக சிக்னல் செய்தும்

இன்டிகேட்டர் போட்டும் இருபுறமும் வாகனம் வருகிறதா என பார்த்துக்கொண்டு நின்றுகொண்டிருந்தபோது அதே ரோட்டில் பின்னால் வந்த TN 57 AR 9714 என்ற பதிவு எண் கொண்ட Ashok Leyland Dost வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுனர் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் சாலை விதிகளை மீறியும் ஆரன் அடிக்காமலும் முறையாக சிக்னல் செய்து நின்று கொண்டிருந்த மனுதாரர் வாகனத்தை கவனிக்காமலும் ஓட்டி வந்து ரோட்டின் இடதுபுற ஓரமாக சிக்னல் செய்து நின்று கொண்டிருந்த மனுதாரர் இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார். மேற்படி விபத்திற்கு TN 57 AR 9714 என்ற பதிவு எண் கொண்ட Ashok Leyland Dost வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுனரே முழுக்காரணமாவார். விபத்தில் மனுதாரருக்கு உடலின் பல இடங்களிலும் பலத்த காயங்கள் ஏற்பட்டு, பழனியில் உள்ள வேல் மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்றுக்கொண்டு பின்னர் மேல்சிகிச்சைக்காக கோவையில் உள்ள ராயல்கேர் மருத்துவமனையில் உள்நோயாளியாக தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டும், மேலும் தலை, நெற்றி, கன்னம், கண், மார்பு, கழுத்து, வயிறு ஆகிய இடங்களில் ஏற்பட்ட ஆழமான வெட்டுக்காயங்கள் மற்றும் இரத்தக்காயங்களுக்கு சிகிச்சைகள் அளிக்கப்பட்டும் சுமார் 50 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று மருத்துவச் செலவாக ரூ.20,00,000/– செலவு செய்துள்ளார். இன்னும் அவர் தொடர்ந்து அவ்வப்போது உள்நோயாளியாகவும், வெளிநோயாளியாகவும் சிகிச்சை பெற்று வருகிறார். மேலும் எதிர்காலத்தில் அவருக்கு நிறைய அறுவை சிகிச்சைகள் செய்ய வேண்டியுள்ளதால் கூடுதல் மருத்துவச் செலவாக ரூ.1,00,000/–க்கு மேல் ஏற்படும் என மருத்துவர் தெரிவித்துள்ளார். மேற்படி கொடுங்காயங்களால் மனுதாரருக்கு நிரந்தர ஊனம் ஏற்பட்டு நிரந்தர ஊனமுற்றவராகிவிட்டார். விபத்தின்போது மனுதாரர் திடகாத்திரமாகவும், ஆரோக்கியமாகவும் இருந்தார். அப்போது அவருக்கு வயது 57 மட்டுமே. விபத்தின்போது மனுதாரர் சொந்தமாக பழனி பெரியப்பா நகரில் ஆனந்த விலாஸ் விபூதி ஸ்டோர் என்ற பெயரில் விபூதி தயாரிக்கும் தொழில் செய்து மாதம் ரூ.3,00,000/– சம்பாதித்து வந்தார். அவருக்கு இந்த விபத்து ஏற்படாமல் இருந்திருந்தால் மேலும் நன்கு உழைத்து அவரது தொழிலை விரிவுபடுத்தி எதிர்காலத்தில் ரூ.5,00,000/–க்கு மேல் வருமானம் ஈட்டி இருப்பார். அவருடைய

வருமானத்தின் மூலம் மட்டுமே அவரது குடும்பம் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வந்தது. மனுதாரர் மேற்படி பாதிப்புகளால் மனுதாரரால் இனி அவர் செய்து வந்த வேலையையோ அல்லது வேறு வேலையையோ முன்பு போல் செய்து வேறு எந்த வகையிலும் வருமானம் ஈட்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் அவருக்கு ஏற்பட்ட கொடுங்காயங்களால் அவரால் தனது அன்றாட வேலைகளைக் கூட அட்டென்டர் உதவியுடன் மிகவும் சிரமப்பட்டு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் அவரது தொழில் இடையிலேயே தடைபட்டதாலும், நிரந்தர ஊனம் ஏற்பட்டதாலும் எதிர்காலத்தில் அவருக்கு கிடைக்க வேண்டிய வருமானம் அனைத்தும் தடைபட்டுவிட்டது. இதனால் அவரது எதிர்கால வருமானம் முற்றிலும் பாதிக்கப்பட்டு மனுதாரரும், அவரது குடும்பத்தினரும் பொருளாதார கஷ்டத்திற்கும், மிகுந்த மன உளைச்சலுக்கும் ஆளாகி உள்ளனர். மனுதாரரின் இந்நிலைக்கு மேற்படி விபத்தே காரணமாகும். மேற்படி விபத்து குறித்து திண்டுக்கல் மாவட்டம், பழனி நகர் காவல் நிலையத்தாரால் குற்ற எண்.322/2022 இ.த.ச. பிரிவுகள் 279, 337, 338–ன்படி விபத்து ஏற்படுத்திய TN 57 AB 9714 என்ற பதிவு எண் கொண்ட Ashok Leyland Dost வாகனத்தை ஓட்டி வந்த நபர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள மேற்படி பாதிப்பிற்கு எதிர்மனுதாரர்கள் ரூ.50,00,000/–ஐ இழப்பீடாக வழங்க உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>3. 2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்உரையின் சுருக்கம் பின்வருமாறு–</u>

மனு பொய்யானது நிலைநிற்கத்தக்கதல்ல. மனுவில் துலக்கப்பட்டுள்ள விபத்து நடைபெற்ற விதம் சரியானதல்ல. அதனை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். காயமடைந்தவரின் வயது, தொழில் மற்றும் மாத வருமானத்தை இந்த எதிர்மனுதாரர் ஏற்கவில்லை. இருசக்கர வாகனத்தை ஓட்டிய மனுதாரரே இந்த விபத்துக்கு முழுக் காரணமாவார். 1–ம் எதிர்மனுதாரர் சாலை விதிகளை கடைப்பிடித்து சாலையின் இடதுபுறமாக மெதுவாகவும், கவனமாகவும் வேனை ஓட்டிக் கொண்டிருந்தார். அந்த நேரத்தில் மனுதாரரின் மகன் முனிராஜா உரிய ஓட்டுனர் உரிமம் இல்லாமல் மோட்டார் சைக்கிளை ஓட்டிக் கொண்டிருந்தார். மேலும் அவர்கள் யாரும் தலைக்கவசம் அணியவில்லை. அவர்கள் மிக அதிக வேகத்தில் கட்டுப்பாடின்றி மேற்கிலிருந்து

கிழக்கு திசை நோக்கி திடீரென சாலையை கடக்க முயன்றதால் வரும் வேனை கவனிக்காமல் வேனை மோதினர். இதனால் விபத்து எற்பட்டது. மேற்கண்ட விபத்து மோட்டார் சைக்கிள் ஓட்டுனரின் தவறினால் மட்டுமே எற்பட்டது. ஆகையால் வேன் ஓட்டிய 1–ம் எதிர்மனுதாரருக்கு இந்த விபத்துடன் எந்த தொடர்பும் இல்லை. எனவே 2–ம் எதிர்மனுதாரர் எந்த இழப்பீடும் வழங்கக் கடமைப்பட்டவரல்ல. மேலும் மனுதாரர் முதலில் பழனி வேல் மருத்துவமனைக்கு முதல் உதவிக்காக அழைத்துச் செல்லப்பட்டார் என்றும், அதன்பிறகு கோயம்புத்தூர் ராயல்கேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு 50 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று ரூ.30,00,000/– செலவானதாகவும், எதிர்கால மருத்துவச் செலவாக ரூ.2,00,000/– ஆகும் என்றும், போக்குவரத்து செலவிற்காக ரூ.1,50,000/– மற்றும் உதவியாளர் செலவிற்காக ரூ.1,00,000/– செலவிட்டதாகக் கூறியுள்ளது அனைத்தும் பொய்யானவை. இதனை மனுதாரரே ஆவணங்களின் வாயிலாக நிரூபிக்க வேண்டும். மேலும் மனுதாரர் பழனி ஆனந்தாவிலாஸ் விபூதி கடை நடத்தி மாதம் ரூ.3,00,000/– சம்பாதித்து வந்தார் என்பதும், விபத்திற்குப் பின்பு தனது வழக்கமான வேலையை செய்ய முடியவில்லை என்றும், நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளவை பொய்யானவை. மேற்படி விபத்து மோட்டார் சைக்கிள் ஓட்டியவரின் தவறினாலேயே ஏற்பட்டது. எனவே மனுதாரர் மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் மற்றும் அவரது காப்பீட்டு நிறுவனத்தையும் வழக்கில் தரப்பினர்களாகச் சேர்க்கவில்லை. ஆகையால் தேவையான தரப்பினர்களைச் சேர்க்கப்படாததால் இம்மனு சட்ட ரீதியாக பொருந்தாது. மேலும் விபத்து நடந்த சமயத்தில் TN 57 AR 9714 என்ற பதிவு எண்ணுடைய தோஸ்த் வேன் சரியான Fitness Certificate இல்லாமல் சாலையில் இயக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. மேற்படி Fitness Certificate கடந்த 18.06.2020 அன்று காலாவதியாகிவிட்டது. இதனால் 1–ம் எதிர்மனுதாரர் திருத்தப்பட்ட மோட்டார் வாகனச் சட்டத்தையும், காப்பீட்டு விதிமுறைகளையும் மீறியுள்ளார். ஆகையால் 2–ம் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு எந்த இழப்பீடும் வழங்க கடமைப்பட்டவரல்ல. மேலும் விபத்து நடந்த நாள் மற்றும் நேரத்தில் 1–ம் எதிர்மனுதாரருக்கு அந்த வேனை ஓட்டுவதற்கு செல்லுபடியாகும் ஓட்டுனர் உரிமம் இல்லை. மேலும் அந்த தோஸ்த் வேனை ஓட்டுவதற்கான தனிப்பட்ட அனுமதி அவரிடம் இல்லை. இதனால் அவர்

மோட்டார் வாகனச் சட்டத்தையும், காப்பீட்டு விதிமுறைகளையும் மீறியுள்ளார். ஆகையால் 2-ம் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு இழப்பீடு வழங்கக் கடமைப்பட்டவரல்ல. மனுதாரர் கோரியுள்ள ரூ.50,00,000/- இழப்பீடு மிகவும் அதிகமாகவும், ஆதாரமற்றதாகவும் உள்ளது. எனவே மனு தள்ளுபடியாக வேண்டும்.

**4. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட வாதுரை மற்றும் இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்கள் முன்வைத்த வாதத்தின் அடிப்படையின் கீழ் வழக்கு கோப்புகள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.**

**5. இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில்,**

1. மனுதாரருக்கு ஏற்பட்ட விபத்தானது TN 57 AB 9714 என்ற பதிவு எண் கொண்ட Ashok Leyland Dost வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநரின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் நிகழ்ந்ததா?
2. மனுவில் கோரியுள்ள இழப்பீட்டுத் தொகையை எதிர்மனுதாரர்கள் செலுத்தக் கடமைப்பட்டவர்களா?
3. மனுதாரருக்கு எவ்வளவு தொகை இழப்பீடாக கிடைக்கத்தக்கது?

**6. மோ.வா.வி.கோ.மனு எண்.174/2022:-**

மனுதாரர் கோரியுள்ள இழப்பீட்டுத் தொகை ரூ.4,00,000/-மும், மேற்படி தொகைக்கு விபத்து தேதி முதல் 12 சதவீதம் வட்டியும் மற்றும் செலவுத் தொகையும் மனுதாரருக்கு, எதிர்மனுதாரர்களால் கிடைக்கும்படி உத்தரவிடக்கோரி இம்மனுவை மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு 166 தமிழ்நாடு இயக்கூர்தி கோருரிமை விதிகள் 1988 விதி (3)-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**7. மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம் பின்வருமாறு-**

மனுதாரர் கடந்த 13.07.2022 அன்று மதியம் சுமார் 12.00 மணியளவில் அவரது சொந்த வேலைக்காக அவருக்குச் சொந்தமான TN 57 BY 2102 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தில் அவரது தந்தை முனியாண்டி என்பவரை பின்புறம் அமர்த்திக்கொண்டு பழனி டு பழைய தாராபுரம் மெயின்ரோட்டில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ரோட்டின் இடதுபுற ஓரமாக மெதுவாகவும், கவனமாகவும் இருவரும் தலைக்கவசம் அணிந்துகொண்டும் அமர்ந்து சென்று

பெரியப்பா நகர் எம்.ஜி.ஆர் சிலை அருகில் அவரது வீட்டிற்கு செல்ல வலதுபுறம் திரும்புவதற்காக ரோட்டின் இடதுபுற ஓரமாக முறையாக சிக்னல் செய்தும் இன்டிகேட்டர் போட்டும் இருபுறமும் வாகனம் வருகிறதா என பார்த்துக்கொண்டு நின்றுகொண்டிருந்தபோது அதே ரோட்டில் பின்னால் வந்த TN 57 AR 9714 என்ற பதிவு எண் கொண்ட Ashok Leyland Dost வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுனர் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் சாலை விதிகளை மீறியும் ஆரன் அடிக்காமலும் முறையாக சிக்னல் செய்து நின்று கொண்டிருந்த மனுதாரர் வாகனத்தை கவனிக்காமலும் ஓட்டி வந்து ரோட்டின் இடதுபுற ஓரமாக சிக்னல் செய்து நின்று கொண்டிருந்த மனுதாரர் இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார். மேற்படி விபத்திற்கு TN 57 AR 9714 என்ற பதிவு எண் கொண்ட Ashok Leyland Dost வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுனரே முழுக்காரணமாவார். விபத்தில் மனுதாரருக்கு உடலின் பல இடங்களிலும் பலத்த காயங்கள் ஏற்பட்டு, பழனியில் உள்ள வேல் மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்றுக்கொண்டு பின்னர் மேல்சிகிச்சைக்காக கோவையில் உள்ள ராயல்கேர் மருத்துவமனையில் வெளிநோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சைகள் அளிக்கப்பட்டும் சுமார் 2 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று மருத்துவச் செலவாக ரூ.50,000/– செலவு செய்துள்ளார். இன்னும் அவர் தொடர்ந்து அவ்வப்போது உள்நோயாளியாகவும், வெளிநோயாளியாகவும் சிகிச்சை பெற்று வருகிறார். மேலும் எதிர்காலத்தில் அவருக்கு நிறைய அறுவை சிகிச்சைகள் செய்ய வேண்டியுள்ளதால் கூடுதல் மருத்துவச் செலவாக ரூ.30,000/–க்கு மேல் ஏற்படும் என மருத்துவர் தெரிவித்துள்ளார். மேற்படி காயங்களால் மனுதாரருக்கு ஊனம் ஏற்பட்டு ஊனமுற்றவராகிவிட்டார். விபத்தின்போது மனுதாரர் திடகாத்திரமாகவும், ஆரோக்கியமாகவும் இருந்தார். அப்போது அவருக்கு வயது 28 மட்டுமே. விபத்தின்போது மனுதாரர் சொந்தமாக பழனி பெரியப்பா நகரில் ஆனந்த விலாஸ் விபூதி ஸ்டோர் என்ற பெயரில் விபூதி தயாரிக்கும் தொழில் செய்து மாதம் ரூ.50,000/– சம்பாதித்து வந்தார். அவருக்கு இந்த விபத்து ஏற்படாமல் இருந்திருந்தால் மேலும் நன்கு உழைத்து அவரது தொழிலை விரிவுபடுத்தி எதிர்காலத்தில் ரூ.1,00,000/–க்கு மேல் வருமானம் ஈட்டி இருப்பார். அவருடைய வருமானத்தின் மூலம் மட்டுமே அவரது குடும்பம் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு

வந்தது. மனுதாரர் மேற்படி பாதிப்புகளால் மனுதாரரால் இனி அவர் செய்து வந்த வேலையையோ அல்லது வேறு வேலையையோ முன்பு போல் செய்து வேறு எந்த வகையிலும் வருமானம் ஈட்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் அவருக்கு ஏற்பட்ட கொடுங்காயங்களால் அவரால் தனது அன்றாட வேலைகளைக் கூட அட்டெண்டர் உதவியுடன் மிகவும் சிரமப்பட்டு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் அவரது தொழில் இடையிலேயே தடைபட்டதாலும், நிரந்தர ஊனம் ஏற்பட்டதாலும் எதிர்காலத்தில் அவருக்கு கிடைக்க வேண்டிய வருமானம் அனைத்தும் தடைபட்டுவிட்டது. இதனால் அவரது எதிர்கால வருமானம் முற்றிலும் பாதிக்கப்பட்டு மனுதாரரும், அவரது குடும்பத்தினரும் பொருளாதார கஷ்டத்திற்கும், மிகுந்த மன உளைச்சலுக்கும் ஆளாகி உள்ளனர். மனுதாரரின் இந்நிலைக்கு மேற்படி விபத்தே காரணமாகும். மேற்படி விபத்து குறித்து திண்டுக்கல் மாவட்டம், பழனி நகர் காவல் நிலையத்தாரால் குற்ற எண்.322/2022 இ.த.ச. பிரிவுகள் 279, 337, 338–ன்படி விபத்து ஏற்படுத்திய TN 57 AB 9714 என்ற பதிவு எண் கொண்ட Ashok Leyland Dost வாகனத்தை ஓட்டி வந்த நபர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள மேற்படி பாதிப்பிற்கு எதிர்மனுதாரர்கள் ரூ.4,00,000/–ஐ இழப்பீடாக வழங்க உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**8. 2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்உரையின் சுருக்கம் பின்வருமாறு–**

மனு பொய்யானது நிலைநிற்கத்தக்கதல்ல. மனுவில் துலக்கப்பட்டுள்ள விபத்து நடைபெற்ற விதம் சரியானதல்ல. அதனை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். காயமடைந்தவரின் வயது, தொழில் மற்றும் மாத வருமானத்தை இந்த எதிர்மனுதாரர் ஏற்கவில்லை. இருசக்கர வாகனத்தை ஓட்டிய மனுதாரரே இந்த விபத்துக்கு முழுக் காரணமாவார். 1–ம் எதிர்மனுதாரர் சாலை விதிகளை கடைப்பிடித்து மெதுவாகவும், கவனமாகவும் வேனை ஓட்டிக் கொண்டிருந்தார். அந்த நேரத்தில் மனுதாரர் ஓட்டுனர் உரிமம் இல்லாமல் மோட்டார் சைக்கிளை ஓட்டிக் கொண்டிருந்தார். மேலும் அவர்கள் யாரும் தலைக்கவசம் அணியவில்லை. அவர்கள் மிக அதிக வேகத்தில் கட்டுப்பாடின்றி மேற்கிலிருந்து கிழக்கு திசை நோக்கி திடீரென சாலையை கடக்க முயன்றதால் வரும் வேனை கவனிக்காமல் வேனை மோதினர். இதனால் விபத்து எற்பட்டது. மேற்கண்ட

விபத்து மோட்டார் சைக்கிள் ஓட்டுனரின் தவறினால் மட்டுமே எற்பட்டது. ஆகையால் வேன் ஓட்டிய 1–ம் எதிர்மனுதாரருக்கு இந்த விபத்துடன் எந்த தொடர்பும் இல்லை. எனவே 2–ம் எதிர்மனுதாரர் எந்த இழப்பீடும் வழங்கக் கடமைப்பட்டவரல்ல. மேலும் மனுதாரர் முதலில் பழனி வேல் மருத்துவமனைக்கு முதல் உதவிக்காக அழைத்துச் செல்லப்பட்டார் என்றும், அதன்பிறகு கோயம்புத்தூர் ராயல்கேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு 50 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று ரூ.80,000/– செலவானதாகவும், எதிர்கால மருத்துவச் செலவாக ரூ.50,000/– ஆகும் என்றும், போக்குவரத்து செலவிற்காக ரூ.50,000/– மற்றும் உதவியாளர் செலவிற்காக ரூ.30,000/– செலவிட்டதாக கூறியுள்ளது அனைத்தும் பொய்யானவை. இதனை மனுதாரரே ஆவணங்களின் வாயிலாக நிரூபிக்க வேண்டும். மேலும் மனுதாரர் பழனியில் ஆனந்தவிலாஸ் விபூதி கடை நடத்தி மாதம் ரூ.50,000/– சம்பாதித்து வந்தார் என்பதும், விபத்திற்குப் பின்பு தனது வழக்கமான வேலையை செய்ய முடியவில்லை என்றும், நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளவை பொய்யானவை. மேற்படி விபத்து மோட்டார் சைக்கிள் ஓட்டியவரின் தவறினாலேயே ஏற்பட்டது. எனவே மனுதாரர் மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் மற்றும் அவரது காப்பீட்டு நிறுவனத்தையும் வழக்கில் தரப்பினர்களாகச் சேர்க்கவில்லை. ஆகையால் தேவையான தரப்பினர்களைச் சேர்க்கப்படாததால் இம்மனு சட்ட ரீதியாக பொருந்தாது. மேலும் விபத்து நடந்த சமயத்தில் TN 57 AR 9714 என்ற பதிவு எண்ணுடைய தோஸ்த் வேன் சரியான Fitness Certificate இல்லாமல் சாலையில் இயக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. மேற்படி Fitness Certificate கடந்த 18.06.2020 அன்று காலாவதியாகிவிட்டது. இதனால் 1–ம் எதிர்மனுதாரர் திருத்தப்பட்ட மோட்டார் வாகனச் சட்டத்தையும், காப்பீட்டு விதிமுறைகளையும் மீறியுள்ளார். ஆகையால் 2–ம் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு எந்த இழப்பீடும் வழங்க கடமைப்பட்டவரல்ல. மேலும் விபத்து நடந்த நாள் மற்றும் நேரத்தில் 1–ம் எதிர்மனுதாரர் அந்த வேனை ஓட்டுவதற்கு செல்படியாகும் ஓட்டுனர் உரிமம் இல்லை. மேலும் அந்த தோஸ்த் வேனை ஓட்டுவதற்கான தனிப்பட்ட அனுமதி அவரிடம் இல்லை. இதனால் அவர் மோட்டார் வாகனச் சட்டத்தையும், காப்பீட்டு விதிமுறைகளையும் மீறியுள்ளார். ஆகையால் 2–ம் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு இழப்பீடு வழங்கக் கடமைப்பட்டவரல்ல. மனுதாரர்

கோரியுள்ள ரூ.4,00,000/– இழப்பீடு மிகவும் அதிகமாகவும், ஆதாரமற்றதாகவும் உள்ளது. எனவே மனு தள்ளுபடியாக வேண்டும்.

9. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட வாதுரை மற்றும் இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்கள் முன்வைத்த வாதத்தின் அடிப்படையின் கீழ் வழக்கு கோப்புகள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

10. இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில்,

4. மனுதாரருக்கு ஏற்பட்ட விபத்தானது TN 57 AB 9714 என்ற பதிவு எண் கொண்ட Ashok Leyland Dost வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநரின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் நிகழ்ந்ததா?
5. மனுவில் கோரியுள்ள இழப்பீட்டுத் தொகையை எதிர்மனுதாரர்கள் செலுத்தக் கடமைப்பட்டவர்களா?
6. மனுதாரருக்கு எவ்வளவு தொகை இழப்பீடாக கிடைக்கத்தக்கது?

11. இருதரப்பிலும் முன்னிலைப்படுத்திய சாட்சிய சான்றாவணங்களின் விவரங்கள் :–

12. மோ.வா.வி.கோ.மனு எண்.172/2022 மற்றும் மோ.வா.வி.கோ.மனு எண்.174/2022 ஆகிய இரு மனுக்களின் மனுதாரர்களும் ஒரே விபத்தில் காயமடைந்துள்ளதால், இரு வழக்குகளும் கூட்டாக விசாரணை செய்யப்பட்டது. மேலும் மோ.வா.வி.கோ.மனு எண்.174/2022 மனுவின் சாட்சியம் மோ.வா.வி.கோ.மனு எண்.172/2022 வழக்கில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

13. இம்மனுவில் மனுதாரர் தரப்பு வழக்கை நிரூபணம் செய்வதற்கு மோ.வா.வி.கோ.மனு எண்.172/2022 மனுவின் மனுதாரர் திரு. முனியாண்டி என்பவர் ம.சா.1 ஆகவும், மோ.வா.வி.கோ.மனு எண்174/2022 மனுவின் மனுதாரர் திரு.முனிராஜா என்பவர் ம.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு, அவர்கள் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.23 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் பழனி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தட்டச்சராக பணிபுரிந்து வரும் திருமதி. பிரியங்கா என்பவர் எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் தரப்பில் எ.ம.சா.ஆ.1 மற்றும் எ.ம.சா.ஆ.2 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 2–ம் எதிர்மனுதாரர் அலுவலகத்தில் சட்ட மேலாளராகப் பணிபுரிந்து

வரும் திரு. சௌந்தரபாண்டியன் என்பவர் எ.ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் தரப்பில் எ.ம.சா.ஆ.3 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மோ.வா.வி.கோ.மனு எண்.172/2022–ல் நீ.ம.சா.ஆ.1 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**14. மோ.வா.வி.கோ.மனு எண்.172/2022 மற்றும் மோ.வா.வி.கோ.மனு எண்.174/2022 மனுக்களில் பிரச்சனை எண்.1–க்கான தீர்வு:–**

ம.சா.1, மோ.வா.வி.கோ.மனு எண்.172/2022 மனுவின் மனுதாரர் ஆவார். அவரது சாட்சியத்தைப் பரிசீலித்ததில், கடந்த 13.07.2022 அன்று மதியம் சுமார் 12.00 மணியளவில் அவரது சொந்த வேலைக்காக அவருக்குச் சொந்தமான TN 57 BY 2102 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தை அவரது மகன் முனிராஜா என்பவர் ஓட்ட மனுதாரர் பின்புறம் அமர்ந்துகொண்டு பயணம் செய்து பழனி டு பழைய தாராபுரம் மெயின்ரோட்டில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ரோட்டின் இடதுபுற ஓரமாக மெதுவாகவும், கவனமாகவும் இருவரும் தலைக்கவசம் அணிந்துகொண்டும் அமர்ந்து சென்று பெரியப்பா நகர் எம்.ஜி.ஆர் சிலை அருகில் அவரது வீட்டிற்கு செல்ல வலதுபுறம் திரும்புவதற்காக ரோட்டின் இடதுபுற ஓரமாக முறையாக சிக்னல் செய்தும் இன்டிகேட்டர் போட்டும் இருபுறமும் வாகனம் வருகிறதா என பார்த்துக்கொண்டு நின்றுகொண்டிருந்தபோது அதே ரோட்டில் பின்னால் வந்த TN 57 AR 9714 என்ற பதிவு எண் கொண்ட Ashok Leyland Dost வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுனர் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் சாலை விதிகளை மீறியும் ஆரன் அடிக்காமலும் முறையாக சிக்னல் செய்து நின்று கொண்டிருந்த மனுதாரர் வாகனத்தை கவனிக்காமலும் ஓட்டி வந்து ரோட்டின் இடதுபுற ஓரமாக சிக்னல் செய்து நின்று கொண்டிருந்த மனுதாரர் இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்திவிட்டதாகவும், விபத்தினால் மனுதாரருக்கு உடலின் பல இடங்களிலும் பலத்த காயங்கள் ஏற்பட்டுவிட்டது எனத் தெரிவித்துள்ளார்.

15. ம.சா.2 மோ.வா.வி.கோ.மனு எண்.174/2022 மனுவின் மனுதாரர் ஆவார். அவரது சாட்சியத்தைப் பரிசீலித்ததில், மனுதாரர் கடந்த 13.07.2022 அன்று மதியம் சுமார் 12.00 மணியளவில் அவரது சொந்த வேலைக்காக அவருக்குச் சொந்தமான TN 57 BY 2102 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தில் அவரது தந்தை முனியாண்டி என்பவரை பின்புறம் அமர்த்திக்கொண்டு பழனி டு பழைய

தாராபுரம் மெயின்ரோட்டில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ரோட்டின் இடதுபுற ஓரமாக மெதுவாகவும், கவனமாகவும் இருவரும் தலைக்கவசம் அணிந்துகொண்டும் அமர்ந்து சென்று பெரியப்பா நகர் எம்.ஜி.ஆர் சிலை அருகில் அவரது வீட்டிற்கு செல்ல வலதுபுறம் திரும்புவதற்காக ரோட்டின் இடதுபுற ஓரமாக முறையாக சிக்னல் செய்தும் இன்டிகேட்டர் போட்டும் இருபுறமும் வாகனம் வருகிறதா என பார்த்துக்கொண்டு நின்றுகொண்டிருந்தபோது அதே ரோட்டில் பின்னால் வந்த TN 57 AR 9714 என்ற பதிவு எண் கொண்ட Ashok Leyland Dost வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுனர் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் சாலை விதிகளை மீறியும் ஆரன் அடிக்காமலும் முறையாக சிக்னல் செய்து நின்று கொண்டிருந்த மனுதாரர் வாகனத்தை கவனிக்காமலும் ஓட்டி வந்து ரோட்டின் இடதுபுற ஓரமாக சிக்னல் செய்து நின்று கொண்டிருந்த மனுதாரர் இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்திவிட்டதாகவும், விபத்தினால் மனுதாரருக்கு உடலின் பல இடங்களிலும் பலத்த காயங்கள் ஏற்பட்டுவிட்டது எனத் தெரிவித்துள்ளார்.

16. மனுதாரர்களின் சாட்சியத்தை மறுப்பதற்கு குறிப்பாக காரணங்கள் எதுவும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தெரிவிக்கப்படவில்லை. பழனி டவுன் காவல் நிலையக் குற்ற எண்.322/2022–ல் இ.த.ச. பிரிவுகள் 279, 337–ல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது ம.சா.ஆ.1 ஆவணத்தைப் பரிசீலித்ததில் தெரியவருகின்றது. மேலும் அந்த ஆவணத்தைப் பரிசீலித்ததில், TN 57 AR 9714 என்ற பதிவு எண் கொண்ட Ashok Leyland Dost என்ற வாகனத்தை ஓட்டி வந்த அதன் ஓட்டுநர் 1–ம் எதிர்மனுதாரரான முருகசாமி என்பவர் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிவந்து மனுதாரர்கள் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. குற்ற இறுதி அறிக்கை ம.சா.ஆ.17 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி குற்ற இறுதி அறிக்கையைப் பரிசீலித்ததில், TN 57 AR 9714 என்ற பதிவு எண் கொண்ட Ashok Leyland Dost என்ற வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநர் முருகசாமி என்பவர் மீது இ.த.ச. 279, 338–ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளது தெளிவாகின்றது. ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.17 ஆகிய ஆவணங்கள் மனுதாரர் தரப்பு சங்கதிகளை உறுதிப்படுத்துவதாக உள்ளது. 13.07.2022 ஆம் தேதியன்று மதியம் 02.00 மணியளவில், பழனி பழைய தாராபுரம் பெரியப்பாநகர் எம்.ஜி.ஆர். சிலை அருகே

**விபத்தானதாக சம்பவ இடம் குறிப்பிட்டுக் காண்பிக்கப்பட்டுள்ளது. மேலும் TN 57 AR 9714 என்ற பதிவு எண் கொண்ட Ashok Leyland Dost என்ற வாகனத்தை பரிசோதித்த மோட்டார் வாகன ஆய்வாளர் வாகனத்தின் இயந்திரக் கோளாறு காரணமாக விபத்து ஏற்படவில்லை என்று சான்று வழங்கியுள்ளதும் ம.சா.ஆ.5 ஆவணத்தைப் பார்வையிட்டதில் தெரியவருகின்றது. இயந்திரக் கோளாறு எதுவும் ஏற்படாத நிலையில் TN 57 AR 9714 என்ற பதிவு எண் கொண்ட Ashok Leyland Dost என்ற வாகனத்தை ஓட்டி வந்த 1-ம் எதிர்மனுதாரர் கவனக்குறைவாகவும், அதிவேகமாகவும் இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்று விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றும் தெளிவாகின்றது. TN 57 AR 9714 என்ற பதிவு எண் கொண்ட Ashok Leyland Dost என்ற வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதை விபத்திற்கு காரணம் என்று இப்பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்படுகிறது.**

**<u>17. மோ.வா.வி.கோ.மனு எண்.172/2022 மற்றும் மோ.வா.வி.கோ.மனு எண்.174/2022-ல் பிரச்சனை எண்.2-க்கான தீர்வு:-</u>**

**TN 57 AR 9714 என்ற பதிவு எண் கொண்ட Ashok Leyland Dost என்ற வாகனம் 1-ம் எதிர்மனுதாரருக்குச் சொந்தமானது என்றும், 2-ம் எதிர்மனுதாரர் மேற்படி வாகனத்தின் காப்பீட்டு நிறுவனம் என்றும், மேற்படி இரண்டு எதிர்மனுதாரர்களும் சேர்ந்தும், தனித்தனியாகவும் இழப்பீடாக மோ.வா.வி.கோ.மனு எண்.172/2022-ல் ரூ.50,00,000/-மும், மோ.வா.வி.கோ.மனு எண்.174/2022-ல் ரூ.4,00,000/-மும் மனுதாரர்களுக்குக் கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றும் மனுதாரர்கள் தரப்பில் வாதிடப்பட்டது. 2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் விபத்து நடந்த சமயத்தில் TN 57 AR 9714 என்ற பதிவு எண்ணுடைய தோஸ்த் வேன் சரியான Fitness Certificate இல்லாமல் சாலையில் இயக்கப்பட்டதாகவும், மேற்படி Fitness Certificate கடந்த 18.06.2020 அன்று காலாவதியாகிவிட்டது என்றும், இதனால் 1-ம் எதிர்மனுதாரர் திருத்தப்பட்ட மோட்டார் வாகனச் சட்டத்தையும், காப்பீட்டு விதிமுறைகளையும் மீறியுள்ளார் என்றும் தெரிவித்துள்ளார். மேற்படி சங்கதிகள் குறித்து பரிசீலிக்கையில், எ.ம.சா.ஆ.1 மற்றும் எ.ம.சா.ஆ.2 ஆகிய ஆவணங்களைப் பரிசீலித்ததில், விபத்து சமயம் TN 57 AR 9714 என்ற பதிவு எண்ணுடைய தோஸ்த் வாகனத்திற்கு தகுதிச்சான்று இல்லை எனத் தெரியவருகிறது. இதுகுறித்து எ.ம.சா.1 தன்னுடைய சாட்சியத்தில், <u>"TN 57 AR 9714</u>**

என்ற வாகனத்திற்கு தகுதிச்சான்று 09.06.2019 முதல் 18.06.2020 வரை இருந்தது. விபத்து தேதியான 13.07.2022 அன்று அந்த வாகனத்திற்கு தகுதிச் சான்று இல்லை. மேற்படி வாகனத்திற்கு எங்கள் அலுவலகத்தில் தான் தகுதிச்சான்று எடுக்கவேண்டும். தகுதிச்சான்று இல்லாமல் பொதுச்சாலையில் இயக்குவது மோட்டார் வாகனச் சட்டத்தின்படி குற்றம் என்றால் சரிதான்" என சாட்சியம் அளித்துள்ளார். இதுகுறித்து ம.சா.1 தனது குறுக்கு விசாரணையில், "ம.சா.ஆ.5 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் 18.06.2019 உடன் தகுதிச்சான்று முடிந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்" என ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார். 1–ம் எதிர்மனுதாரர் திருத்தப்பட்ட மோட்டார் வாகனச் சட்டத்தையும், காப்பீட்டு விதிமுறைகளையும் மீறியுள்ளார் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் ம.சா.ஆ.4 மற்றும் ம.சா.ஆ.5 ஆகிய ஆவணங்களைப் பரிசீலித்ததில், விபத்து சமயத்தில் 1–ம் எதிர்மனுதாரருக்கு ஓட்டுனர் உரிமம் உள்ளது என்பது தெளிவாகிறது. ம.சா.ஆ.3 ஆவணத்தைப் பரிசீலித்ததில், TN 57 AR 9714 என்ற பதிவு எண் கொண்ட Ashok Leyland Dost என்ற வாகனம் 2–ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது தெளிவாகிறது. விபத்து நடந்த 13.07.2022 அன்று காப்பீடு அமலில் இருந்துள்ளது மேற்படி ஆவணங்களைப் பரிசீலித்ததில் தெரியவருகின்றது. அதேசமயம் 1–ம் எதிர்மனுதாரர் TN 57 AR 9714 என்ற பதிவு எண் கொண்ட Ashok Leyland Dost என்ற வாகனத்திற்கு தகுதிச்சான்று இல்லாமல் பொதுச்சாலையில் மேற்படி வாகனத்தை இயக்கியதால், பாலிசி விதிமுறை மீறல் ஏற்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளதால், 2–ம் எதிர்மனுதாரர் அவ்வாறு செலுத்தும் தொகையை, 1–ம் எதிர்மனுதாரரிடமிருந்து திருப்பி வசூலித்துக்கொள்ள அனுமதித்து உத்திரவிடலாம் என முடிவு செய்யப்பட்டு அவ்வாறே பிரச்சனை எண்கள்.2–க்கு தீர்வு காணப்படுகிறது.

**18. மோ.வா.வி.கோ.மனு எண்.172/2022–ல் பிரச்சனை எண்.3–க்கான தீர்வு:–**

விபத்தினால் மனுதாரருக்கு பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளது என்றும், கோயம்புத்தூரில் உள்ள உள்ள ராயல்கேர் மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சைகள் அளிக்கப்பட்டு சுமார் 25 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று மருத்துவச் செலவாக ரூ.10,62,692/– வரை மருத்துவச் செலவு ஏற்பட்டுள்ளது என்றும், எதிர்காலத்தில் அறுவை சிகிச்சை செய்வதற்காக

ரூ.10,00,000/– வரை செலவாகும் என மருத்துவர்கள் தெரிவித்ததாகவும் ம.சா.1–ன் சாட்சியத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ம.சா.ஆ.7 ஆன காயச்சான்றிதழைப் பரிசீலித்ததில், மனுதாரருக்கு இடது மார்பு சுவர் மற்றும் இடது தோள்பகுதியில் சுமார் 15 x 10 செ.மீ அளவுள்ள சிவந்த காயமும், வலது temporal மற்றும் maxillary பகுதியில் காயமும், வலது zygomatico maxillary பகுதியில் வலியுள்ளதாகவும், இடது மார்பு பகுதியில் மூச்சு விடுவதில் சிரமம் உடன் வலியுள்ளதாகவும், இடது scapular பகுதி மற்றும் கீழ் முதுகு பகுதியில் வலி மற்றும் காயம் ஏற்பட்டுள்ளது தெரியவருகிறது. ம.சா.ஆ.10 ஆன டிஸ்சார்ஜ் சம்மரியைப் பரிசீலித்ததில், மனுதாரர் 13.07.2022 முதல் 05.08.2022 வரை அங்கு உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதியாகி அவருக்கு சிகிச்சைகள் செய்யப்பட்டது தெரியவருகின்றது. ம.சா.ஆ.11 ஆவணத்தின்படி ரூ.10,62,692/– மருத்துவச் செலவாக ஏற்பட்டுள்ளது தெரியவருகின்றது.

19. மனுதாரர் தன் மனுவில் தனக்கு நிரந்தர ஊனம் ஏற்பட்டதாக மனுவில் தெரிவித்துள்ளார். மனுதாரருக்கு விபத்தினால் ஏற்பட்டுள்ள உடல் குறைபாட்டை எடுத்துக் கூறுவதற்கு மருத்துவர் எவரும் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. ஆவணங்களை மட்டுமே தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் ஊனச்சான்றிதழ் நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. திண்டுக்கல் அரசு மருத்துவமனையின் சேர்மனால் மனுதாரர் பரிசோதனை செய்யப்பட்டு குறைபாடு குறித்து சான்று வழுங்கப்பட்டுள்ளது. மனுதாரரின் ஊனக்குறைபாடு 49 சதவீதம் என்று மருத்துவக் குழுமம் சான்று வழங்கியுள்ளது. மேற்படி ஊனக்குறைபாடு சான்றிதழ் குறித்து எதிர்மனுதாரர்கள் தரப்பில் மறுப்பு ஏதும் தெரிவிக்கவில்லை. எனவே விபத்து மூலம் மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள காயங்களினால் மனுதாரருக்கு 49 சதவீதம் உடல் ஊனக்குறைபாடு ஏற்பட்டுள்ளது என்று இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது. எனவே <u>49 x ரூ.7,000/– = ரூ.3,43,000/–</u> பணம் ஊனக்குறைபாட்டுக்காகப் பெற மனுதாரர் தகுதியுடையவர்.

20. மனுதாரருக்கு விபத்தினால் ஏற்பட்ட காயங்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. அவர் கோயம்புத்தூரில் உள்ள ராயல் கேர் மருத்துவமனையில் 13.07.2022 முதல் 05.08.2022 வரை சிகிச்சை பெற்றுள்ளார். ஆகவே மனுதாரருக்கு

ஏற்பட்டுள்ள **வலி மற்றும் துன்பத்திற்காக ரூ.50,000/–** பணம் கிடைக்கத்தக்கது என தீர்மானிக்கப்படுகிறது.

21. மனுதாரருக்கு எதிர்காலத்தில் அறுவை சிகிச்சை செய்வதற்காக ரூ.10,00,000/– வரை செலவாகும் என மருத்துவர்கள் தெரிவித்ததாக மனுவில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அதற்கான மருத்துவச் சான்றிதழ் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை. ஆகையால் மனுதாரருக்கு எதிர்கால மருத்துவச் செலவு கிடைக்கத்தக்கதல்ல என தீர்மானிக்கப்படுகிறது.

22. மனுதாரரின் **வசதி குறைவுக்காக ரூ.30,000/–** பணம் கிடைக்கத்தக்கது என தீர்மானிக்கப்படுகிறது.

23. மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள காயங்களில் இருந்து மீண்டு வருவதற்கு அவருக்கு கூடுதல் சத்துணவு அளிக்கப்படுவது அவசியமாகும். ஆகவே **கூடுதல் சத்துணவு அளிப்பதற்கான செலவு ரூ.20,000/–** மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது.

24. மனுதாரர் கோயம்புத்தூரில் உள்ள ராயல் கேர் மருத்துவமனையில் 13.07.2022 முதல் 05.08.2022 வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளார். மனுதாரர் மருத்துவச் செலவிற்கான மருத்துவ இரசீதுகள் ரூ.10,62,692/–க்குரியதை ம.சா.ஆ.11 ஆக தாக்கல் செய்துள்ளார். எனவே மனுதாரருக்கு **மருத்துவச் செலவிற்கு ரூ.10,62,692/–** கிடைக்கத்தக்கதாகும்.

25. மனுதாரர் கோயம்புத்தூரில் உள்ள ராயல் கேர் மருத்துவமனையில் 13.07.2022 முதல் 05.08.2022 வரை உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தபோதும், அதன் தொடர்ச்சியாகவும் மனுதாரரின் உதவிக்கு அடிப்படை தேவைக்காக Attender இருந்திருப்பார். எனவே **Attender கட்டணமாக ரூ.10,000/–** பணம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதாகும்.

26. மனுதாரருக்கு விபத்து ஏற்பட்டு அவர் சிகிச்சைக்காக விபத்து ஏற்பட்ட இடத்திலிருந்து கோயம்புத்தூரில் உள்ள ராயல் கேர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். எனவே **போக்குவரத்துச் செலவுக்காக ரூ.10,000/–** மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது.

25. விபத்தின்போது மனுதாரர் மருத்துவ சிகிச்சையில் இருந்த சமயம் வருமான இழப்பீடாக **ரூ.8,000/-** வீதம் இரண்டு மாத காலத்திற்கு **ரூ.16,000/-** கிடைக்கத்தக்கது.

| | | | |
|---|---|---|---|
| 49% நிரந்தர ஊனத்திற்காக (49 x 7000) | : | ரூ. | **3,43,000.00** |
| வலி மற்றும் துன்பத்திற்காக | : | ரூ. | **50,000.00** |
| வசதி குறைவிற்காக | : | ரூ. | **30,000.00** |
| கூடுதல் ஊட்டச்சத்துக்காக | : | ரூ. | **20,000.00** |
| மருத்துவ செலவிற்காக (ம.சா.ஆ.11-ன்படி) | : | ரூ. | **10,62,692.00** |
| உதவியாளர் செலவுக்காக | : | ரூ. | **10,000.00** |
| போக்குவரத்து செலவுக்காக | : | ரூ. | **10,000.00** |
| வருமான இழப்பீடாக [ரூ.8000 x 2 = ரூ.16,000] | : | ரூ. | **16,000.00** |
| **மொத்தம்** | : | ரூ. | **15,41,692.00** |

27. மேற்சொன்ன பல்வேறு வகைகளில் மனுதாரருக்கு ஆக மொத்தம் **ரூ.15,41,692/-** பணம் கிடைக்கத்தக்கது என்று தீர்ப்பாயம் இந்த பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

**28. மோ.வா.வி.கோ.மனு எண்.174/2022-ல் பிரச்சனை எண்.3-க்கான தீர்வு:-**

விபத்தினால் மனுதாரருக்கு தலையில் இரத்தக்கசிவு மற்றும் வீக்கம் ஏற்பட்டும், மேலும் தலை, இரண்டு கைகள், இரண்டு கால்கள், இரண்டுபுற தோள்பட்டை, வயிறு, முதுகு ஆகிய இடங்களில் ஆழமான வெட்டுக்காயங்கள் மற்றும் இரத்தக்காயங்கள் ஏற்பட்டும், மேலும் உடலின் பல இடங்களிலும் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளது என்றும், பின்னர் பழனியில் உள்ள வேல் மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்றுக்கொண்டு, பின்னர் மேல் சிகிச்சைக்காக கோவையில் உள்ள ராயல்கேர் மருத்துவமனையில் வெளிநோயாளியாக சிகிச்சை பெற்று மருத்துவ செலவாக ரூ.50,000/- வரை மருத்துவச் செலவு ஏற்பட்டுள்ளது என்றும், எதிர்காலத்தில் அறுவை சிகிச்சை செய்வதற்காக ரூ.30,000/- வரை செலவாகும் என மருத்துவர்கள் தெரிவித்ததாகவும் ம.சா.2-ன் சாட்சியத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ம.சா.ஆ.20 ஆன மருத்துவச் சான்றைப் பரிசீலிக்கையில், மனுதாரர் கோவை ராயல்

**கேர் மருத்துவமனையில் புறநோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளது தெரியவருகிறது. ம.சா.ஆ.21 ஆவணத்தின்படி ரூ.5,899/- மருத்துவச் செலவாக ஏற்பட்டுள்ளது தெரியவருகின்றது.**

**29. மனுதாரருக்கு விபத்தினால் ஏற்பட்டுள்ள உடல் குறைபாட்டை எடுத்துக் கூறுவதற்கு மருத்துவர் எவரும் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே விபத்து மூலம் மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள காயங்களினால் மனுதாரருக்கு உடல் ஊனக்குறைபாட்டிற்கான இழப்பு கிடைக்கத்தக்கதல்ல என்று இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது. எனவே ஊனக்குறைபாட்டுக்காகப் பணம் பெற மனுதாரர் தகுதியற்றவர் ஆவார்.**

**30. மனுதாரருக்கு விபத்தினால் ஏற்பட்ட காயங்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. அவர் கோவையில் உள்ள ராயல் கேர் மருத்துவமனையில் புறநோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளார். ஆகவே மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள <u>வலி மற்றும் துன்பத்திற்காக ரூ.10,000/-</u> பணம் கிடைக்கத்தக்கது என தீர்மானிக்கப்படுகிறது.**

**31. மனுதாரருக்கு எதிர்காலத்தில் அறுவை சிகிச்சை செய்வதற்காக ரூ.30,000/- வரை செலவாகும் என மருத்துவர்கள் தெரிவித்ததாக மனுவில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அதற்கான மருத்துவச் சான்றிதழ் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை. ஆகையால் மனுதாரருக்கு எதிர்கால மருத்துவச் செலவு கிடைக்கத்தக்கதல்ல என தீர்மானிக்கப்படுகிறது.**

**32. மனுதாரரின் <u>வசதி குறைவுக்காக ரூ.10,000/-</u> பணம் கிடைக்கத்தக்கது என தீர்மானிக்கப்படுகிறது.**

**33. மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள காயங்களில் இருந்து மீண்டு வருவதற்கு அவருக்கு கூடுதல் சத்துணவு அளிக்கப்படுவது அவசியமாகும். ஆகவே <u>கூடுதல் சத்துணவு அளிப்பதற்கான செலவு ரூ.10,000/-</u> மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது.**

**34. மனுதாரர் கோவையில் உள்ள ராயல்கேர் மருத்துவமனையில் புறநோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளார். மனுதாரர் மருத்துவச் செலவிற்கான மருத்துவ**

இரசீதுகள் ரூ.5,899/–க்குரியதை ம.சா.ஆ.21 ஆக தாக்கல் செய்துள்ளார். எனவே மனுதாரருக்கு **மருத்துவச் செலவிற்கு ரூ.5,899/–** கிடைக்கத்தக்கதாகும்.

35. மனுதாரருக்கு விபத்து ஏற்பட்டு அவர் சிகிச்சைக்காக விபத்து ஏற்பட்ட இடத்திலிருந்து கோவையில் உள்ள ராயல்கேர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். எனவே **போக்குவரத்துச் செலவுக்காக ரூ.5,000/–** மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது.

37. விபத்தின்போது மனுதாரர் மருத்துவ சிகிச்சையில் இருந்த சமயம் வருமான இழப்பீடாக **ரூ.8,000/–** வீதம் ஒரு மாத காலத்திற்கு **ரூ.8,000/–** கிடைக்கத்தக்கது.

| | | | |
|---|---|---|---|
| நிரந்தர ஊனத்திற்காக | : | ரூ. | ------- |
| வலி மற்றும் துன்பத்திற்காக | : | ரூ. | 10,000.00 |
| வசதி குறைவிற்காக | : | ரூ. | 10,000.00 |
| கூடுதல் ஊட்டச்சத்துக்காக | : | ரூ. | 10,000.00 |
| மருத்துவ செலவிற்காக (ம.சா.ஆ.21–ன்படி) | : | ரூ. | 5,899.00 |
| போக்குவரத்து செலவுக்காக | : | ரூ. | 5,000.00 |
| வருமான இழப்பீடாக [ரூ.8000 x 1 = ரூ.8,000] | : | ரூ. | 8,000.00 |
| **மொத்தம்** | : | **ரூ.** | **48,899.00** |

38. மேற்சொன்ன பல்வேறு வகைகளில் மனுதாரருக்கு ஆக மொத்தம் **ரூ.48,899/-** பணம் கிடைக்கத்தக்கது என்று தீர்ப்பாயம் இந்த பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

**39. மோ.வா.வி.கோ.மனு எண்.172/2022 மனுவில் முடிவில், இம்மனு செலவுத் தொகையுடன் பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.**

1. மனுதாரருக்கு இழப்பீட்டுத் தொகை **ரூ.15,41,692/–**ஐ (ரூபாய் பதினைந்து லட்சத்து நாற்பத்தி ஓராயிரத்து அறுநூற்றி தொண்ணூற்றி இரண்டு மட்டும்) 2–ம் எதிர்மனுதாரர் செலுத்தவேண்டுமென்றும்,

2. 2–ம் எதிர்மனுதாரர் அவ்வாறு செலுத்தும் தொகையை 1–ம் எதிர்மனுதாரரிடமிருந்து திருப்பி வசூலித்துக்கொள்ள அனுமதியளித்தும்,
3. மேலும் 2–ம் எதிர்மனுதாரர் இழப்பீட்டுத் தொகைக்கு ஆண்டொன்றுக்கு 7.5 சதவீதம் வட்டியுடன் இம்மனு தாக்கல் செய்யப்பட்ட **16.08.2022** ஆம் தேதியிலிருந்து தீர்வுத் தொகை வசூலாகும் தேதி வரையும் மனுதாரருக்குச் செலுத்த வேண்டுமென்றும்,
4. இழப்பீட்டுத் தொகையை 2–ம் எதிர்மனுதாரர் இன்றைய தேதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் பழனி, பாரத ஸ்டேட் வங்கிக் கணக்கு எண். **C.A.43562037419 (IFSC Code No: SBIN0000894)**-ல் செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்தியபின் மொத்த இழப்பீட்டுத் தொகையான **ரூ.15,41,692/–** ஐ வட்டி மற்றும் செலவுத் தொகையுடன் மனுதாரர் உடனடியாக பெற்றுக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.
5. பாக்கி நீதிமன்ற கட்டணத்தை மனுதாரர் இன்றைய தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள் நீதிமன்றத்தில் செலுத்த வேண்டும்.
6. வழக்கறிஞர் கட்டணம் **ரூ.22,417/-** என நிர்ணயம் செய்யப்படுகிறது.

**40. மோ.வா.வி.கோ.மனு எண்.174/2022 மனுவில் முடிவில், இம்மனு செலவுத் தொகையுடன் பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.**

1. மனுதாரருக்கு இழப்பீட்டுத் தொகை **ரூ.48,899/-**ஐ (ரூபாய் நாற்பத்தி எட்டாயிரத்து எண்ணூற்றி தொண்ணூற்றி ஒன்பது மட்டும்) 2–ம் எதிர்மனுதாரர் செலுத்த வேண்டுமென்றும்,
2. 2–ம் எதிர்மனுதாரர் அவ்வாறு செலுத்தும் தொகையை 1–ம் எதிர்மனுதாரரிடமிருந்து திருப்பி வசூலித்துக்கொள்ள அனுமதியளித்தும்,
3. மேலும் 2–ம் எதிர்மனுதாரர் இழப்பீட்டுத் தொகைக்கு ஆண்டொன்றுக்கு 7.5 சதவீதம் வட்டியுடன் இம்மனு தாக்கல்

செய்யப்பட்ட **16.08.2022** ஆம் தேதியிலிருந்து தீர்வுத் தொகை வசூலாகும் தேதி வரையும் மனுதாரருக்குச் செலுத்த வேண்டுமென்றும்,

4. இழப்பீட்டுத் தொகையை 2–ம் எதிர்மனுதாரர் இன்றைய தேதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் பழனி, பாரத ஸ்டேட் வங்கிக் கணக்கு எண். **C.A.43562037419 (IFSC Code No: SBIN0000894)**-ல் செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்தியபின் மொத்த இழப்பீட்டுத் தொகையான **ரூ.48,899/-** ஐ வட்டி மற்றும் செலவுத் தொகையுடன் மனுதாரர் உடனடியாக பெற்றுக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.
7. பாக்கி நீதிமன்ற கட்டணத்தை மனுதாரர் இன்றைய தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள் நீதிமன்றத்தில் செலுத்த வேண்டும்.
8. வழக்கறிஞர் கட்டணம் **ரூ.2,500/-** என நிர்ணயம் செய்யப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு உரைக்கப்பட்டு, அவரால் நேரடியாகக் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் நாள் ஆகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

K BHARATHI

Digitally signed by K BHARATHI
Date: 2026.03.18 18:46:00 +0530

**மோட்டார் வாகன விபத்து கோரிக்கை தீர்ப்பாயர்
மற்றும் கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.**

| **மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் : –** | | |
|---|---|---|
| ம.சா.1. | : | திரு. முனியாண்டி – (மனுதாரர்) |
| ம.சா.2. | : | திரு. முனிராஜா – (மனுதாரர்) |

**மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் : –**

| வ. எண் | தேதி | சான்றாவண விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 13.07.2022 | முதல் தகவல் அறிக்கை | இணைய நகல் |

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.2 | --- | 1–ம் எதிர்மனுதாரர் வாகன பதிவுச் சான்று நகல் (2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி வ ா கனத்தின் தகுதிச் சான்றிதழ் 18.06.2020–யுடன் முடிவடைந்துவிட்டது என்றும், பதிவுச் சான்றின் முதல் பக்கம் மட்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்து ஆட்சேபணை செய்யப்பட்டது) | நகல் |
| ம.சா.ஆ.3 | 08.04.2022 | 1–ம் எதிர்மனுதாரர் வாகன காப்பீட்டுச் சான்று | நகல் |
| ம.சா.ஆ.4 | --- | எதிர்மனுதாரா வாகன ஓட்டுனர் உரிமம் | நகல் |
| ம.சா.ஆ.5 | 25.07.2022 | 1–ம் எதிர்மனுதாரர் மோட்டார் வாகன ஆய்வறிக்கை | இணைய நகல் |
| ம.சா.ஆ.6 | 13.07.2022 | விபத்துப் பதிவேடு | இணைய நகல் |
| ம.சா.ஆ.7 | 13.07.2022 | காயச்சான்று | இணைய நகல் |
| ம.சா.ஆ.8 | --- | நுண்கதிர் படங்கள் (3 எண்ணிக்கை) | அசல் |
| ம.சா.ஆ.9. | 13.07.2022 | ஸ்கேன் ரிப்போர்ட் | அசல் |
| ம.சா.ஆ.10 | 13.07.2022 | டிஸ்சார்ஜ் சம்மரி | அசல் |
| ம.சா.ஆ.11 | --- | மருந்து மற்றும் மருத்துவமனை பில்கள் அதற்குண்டான இணைப்பு ரூ.10,62,692/– (51 எண்ணிக்கை) | அசல் |
| ம.சா.ஆ.12 | --- | முனியாண்டி அமர்ந்து சென்ற வா கனத்தின் வாகனப் பதிவு சான்று | இணைய நகல் |
| ம.சா.ஆ.13 | 21.10.2021 | முனியாண்டி அமர்ந்து சென்ற வாகனத்தின் காப்பீட்டுச் சான்று | இணைய நகல் |
| ம.சா.ஆ.14 | --- | முனியாண்டி அமர்ந்து சென்ற வாகனத்தின் ஓட்டுனர் உரிமம் | இணைய நகல் |
| ம.சா.ஆ.15 | 25.07.2022 | முனியாண்டி அமர்ந்து சென்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை | இணைய நகல் |
| ம.சா.ஆ.16 | 13.07.2022 | மாதிரி வரைபடம் | இணைய நகல் |
| ம.சா.ஆ.17 | 30.09.2022 | குற்ற இறுதி அறிக்கை | இணைய நகல் |
| ம.சா.ஆ.18 | --- | ஆதார் அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்து பார்க்கப்பட்டது) | நகல் |

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.19 | --- | பான் கார்டு (அசலுடன் ஒப்பீடு செய்து பார்க்கப்பட்டது) | நகல் |
| ம.சா.ஆ.20 | 13.07.2022 | கோவை, ராயல்கேர் மருத்துவமனையில் புறநோயாளியாக சிகிச்சை பெற்றதற்கான சிகிச்சை மருத்துவர் வழங்கிய மருத்துவச் சான்று | அசல் |
| ம.சா.ஆ.21 | --- | மருந்து மற்றும் மருத்துவமனை பில்கள் ரூ.5,899/- (14 எண்ணிக்கை) | அசல் |
| ம.சா.ஆ.22 | --- | தொடர் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான மருத்துவக் குறிப்புகள் (4 எண்ணிக்கை) | அசல் |
| ம.சா.ஆ.23 | --- | ஆதார் அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்து பார்க்கப்பட்டது) | நகா |

| **எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி : -** | | |
|---|---|---|
| எ.ம.சா.1 . | : | செல்வி. பிரியங்கா - (பழனி வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் தட்டச்சர்) |
| எ.ம.சா.2. | : | திரு. சௌந்தரபாண்டியன் - (2-ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் சட்ட மேலாளர்) |

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் : -**

| வ. எண் | தேதி | சான்றாவண விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 20.08.2025 | மோட்டார் வாகன ஆய்வாளர் வழங்கிய சான்று | அசல் |
| ம.சா.ஆ.2 | --- | மேற்படி வாகனத்தின் தகுதிச்சான்று குறித்த எடுகுறிப்பு | கணிணி நகல் |
| ம.சா.ஆ.3 | 06.04.2022 | நிபந்தனையுடன் கூடிய பாலிசி நகல் | கணிணி நகல் |

K BHARATHI

Digitally signed by K BHARATHI
Date: 2026.03.18 18:46:13 +0530

**மோட்டார் வாகன விபத்து கோரிக்கை தீர்ப்பாயர்**
**மற்றும் கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**